கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி:11.01.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பிஜி எண்டர்பிரைசஸ், வேலூருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உதவித்தொகை மூலம் முதுகலை மாணவர்களின் ஆராய்ச்சியை எளிதாக்குவதற்காக 10.01.2024 அன்று பிஜி எண்டர்பிரைசஸ், வேலூருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொண்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் (ICAR) மதிப்புமிக்க சர்தார் படேல் சிறந்த நிறுவன விருது மற்றும் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) 2023 தரவரிசையில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது. பிஜி எண்டர்பிரைசஸ் என்பது கூட்டாண்மை அடிப்படையிலான நிறுவனமாகும். இது நீர்க்கட்டுப்பாட்டு கருவி, இணையம் அடிப்படையிலான ஆற்றல் மேலாண்மை சாதனங்கள், வனவிலங்குகளை விரட்டும் செயற்கை நுண்ணறிவு கொண்ட தானியங்கு இயந்திரத்தை உருவாக்குதல் ஆகியவற்றின் உற்பத்தியாளர் மற்றும் மொத்த விற்பனையாளராக விளங்குகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் அவையோரை வரவேற்று, இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விவரித்தார். பொதுவான ஆராய்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகள் குறித்து விவாதித்த தரப்பினர், உதவித்தொகை வழங்குவதன் மூலம் மாணவர்களின் பயிற்சி மற்றும் தரமான முதுகலை ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக நீண்டகால ஒத்துழைப்பில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஆர்.தமிழ்வேந்தன் மற்றும் வேலூர் பிஜி எண்டர்பிரைசஸ் தலைமைச் செயல் அதிகாரி திரு பி.ஜி. ராகவந்திர் ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி முன்னிலையில் மாணவர்களின் நலனுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநர், முனைவர் இ.சோமசுந்தரம், தொழில்நுட்ப வணிககாப்பக முதன்மை செயல் அலுவலர் திரு.ஏ.வி.ஞானசம்பந்தம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என்.கே. சத்தியமூர்த்தி, வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் வி.செந்தில்வேல் மற்றும் இருதரப்பு பிரதிநிதிகளும் கையெழுத்திடும் விழாவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**